


### சர்வதேச அளவிலான கார் ரேஸை எங்கள் ஆட்சியில் சிறப்பாக நடத்தி காட்டினோம்!
### எங்களை கொச்சைப்படுத்துவதாக நினைத்து நீங்கள்

# கார் ரேஸ் விளையாட்டு வீரர்களை கொச்சைப்படுத்துகிறீர்கள்!

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்!



**சென்னை, ஆக. 29-**

**சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, சர்வதேச அளவிலான கார் ரேஸை எங்கள் ஆட்சியில் சிறப்பாக நடத்தி காட்டினோம். எங்களை கொச்சைப்படுத்துவதாக நினைத்து, நீங்கள் கார் ரேஸ் விளையாட்டு வீரர்களை கொச்சைப் படுத்துகிறீர்கள் என்று விமர்ச்சித்தார்.**

சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கள் உறுப்பினர் பேசும்போது இங்கு முதலமைச்சர் அவர்கள் 110 அறிவிப்பில் கொடுத்திருக்கிறார். யார் யாருக்கு கார் இல்லையோ அவர்களுக்கு நீங்கள் வாங்கி கொடுங்கள். விவசாயக் கடன்கள் எல்லாம் இன்னும் தள்ளுபடி செய்ய வில்லை. அவை யெல்லாம் நீங்கள் தேர்தலில் கொடுத்த வாக்குறுதி.

ஆட்சி பொறுப்பேற்கும்போது என்ன சொன்னீர்கள் என்றால், சென்ற அரசு கஜானாவைத் துடைத்து வைத்துவிட்டு சென்று விட்டார்கள் என்று குறை சொல்லிக் கொண்டு இருந்தீர்கள்.

எனவே, எங்களின் திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த நிலைப்பாடு. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எங்களுக்கு தேவையில்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டோம். நீங்கள் யாரும் கார் வாங்கிக்கொள்ள கூடாது என்று சொல்லவில்லை. கார் வாங்கிக் கொள்ளுங்கள். எல்லா தொகுதியும் சுற்றுங்கள்.

எங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொடர்ந்து மூன்றாவது முறையாக அந்தத் தொகுதியில் நின்று, மக்களின் வாக்குகளைப் பெற்று வென்று வந்துள்ளார். எனவே, அவரைக் கொச்சைப்படுத்தி பேசக்கூடாது.

இங்கு `கார் ரேஸ்' பற்றி ஒரு பேச்சு வருகிறது. அது ஒரு இன்டர் நேஷனல் ரேஸ். ஆசியாவிலேயே முதன்முறை யாக இரவு நேரத்தில் நடத்திக் காட்டு வோம் என்று நடத்திக் காட்டினோம். இதைத் தடுப்பதற்கு அப்போது பலபேர் நீதிமன்றத்துக்கு எல்லாம் சென்றார்கள். பாதுகாப்பு இல்லை, கார்கள் எல்லாம் வேகமாகச் செல்லும் என்று சொல்லி, அதை நிறுத்துவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்களை யெல்லாம் நீதிமன்றம் கடுமையாக கண்டித்தது. சர்வதேச அளவிலான ஒரு நிகழ்ச்சியை (இன்டர்நேஷனல் ஈவென்ட்) தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறீர்கள். இதை நீங்கள் நடத்த வேண்டும் என்று வெற்றிகரமாக எங்கள் ஆட்சியில் அதை நடத்தினோம்.

கார் ரேஸை கொச்சப்படுத்துவது, நீங்கள் எங்களைக் கொச்சைப் படுத்தவில்லை. அந்த விளையாட்டு வீரர்களைக் கொச்சைப்படுத்தி இருக்கிறீர்கள்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### நேபாளத்தில் திடீர் வெள்ளப்பெருக்குக் காரணம்

# பனிப்பாறை வெடிப்பை உறுதி செய்யும் செயற்கைக் கோள் படங்கள் வெளியீடு!


## படங்களை வெளியிட்ட இஸ்ரோ!

*புதுடெல்லி, ஆக. 29-*

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்திற்கு காரணமான பனிப்பாறை வெடிப்பை உறுதி செய்யும் செயற்கைக் கோள் படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்திற்கு நிலநடுக்கம் தான் காரணம் என்று சந்தேகிக்கப்பட்டது. ஆனால், இமயமலையின் பனிப்பாறை உடைந்த அதிர்வுகள் தான் நிலநடுக்க அலைகளாக பதிவாகியிருந்ததாக பின்னர் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், நேபாளத்தில் நேற்று ஏற்பட்ட மிகக் கொடூரமான திடீர் வெள்ளத்திற்கு காரணமாக பனிப்பாறை சரிவு மற்றும் பனிப்பாறை உடைப்புகளை உறுதி செய்யும் செயற்கைக் கொள் படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. இது குறித்த இஸ்ரோவின் ஆய்வு முடிவுகளின்படி, நேபாள திபெத் எல்லைப் பகுதியில் இருந்த ஒரு குறிப்பிட்ட பனிப்பாறையின் மூன்றில் இரண்டு பங்கு திடீரென தனியாகப் பிரிந்து சரிந்து விழுந்துள்ளது. இந்த பிரம்மாண்ட பனிப்பாறை சரிவு, டன் கணக்கிலான பனி மற்றும் பாறை இடிபாடுகளை பயங்கர வேகத்தில் மலையில் மேல் பகுதியில் இருந்து கீழ்நோக்கி தள்ளியது.

சரிந்து விழுந்த பனி மற்றும் இடிபாடுகள் அங்கிருந்த சிறிய ஆற்றை தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தி, ஒரு அணையைப் போல மாற்றியது. பனிப்பாறையின் அதிவேக உருக்கம் காரணமாக, அந்தத் தற்காலிக அணை உடைந்து, திடீரெனக் கட்டுக்கடங்காத வெள்ளப் பெருக்காகக் கீழ்நோக்கிப் பாய்ந்தது. இதனால் நேபாளத்தின் ரசுவா, ரசுவாகாதி, திமுரே ஆகிய பகுதிகள் மற்றும் ஆறுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வீடுகள், பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் இஸ்ரோ விளக்கம் அளித்துள்ளது. இந்த புகைப்படங்கள் ரிசோர்ஸ்சாட்2ஏ மற்றும் லேண்ட்சாட் 9 ஆகிய செயற்கைக்கோள்கள் மூலம் எடுக்கப்பட்டதாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி நகர அவை தலைவர் சேட். பா. பரமேஸ்வரன் இல்ல விழாவில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி., மாநில உயர்நிலை திட்டசெயல் குழு உறுப்பினர் எல்.மூக்கையா, தேர்தல் பணி குழு இணை செயலாளர் கம்பம் செல்வேந்திரன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர். இந்த நிகழ்ச்சியில் பெரியகுளம் ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டி, தாமரைக்குளம் முன்னாள் பேரூராட்சி தலைவர் அன்பழகன், பழனி இளையராஜா, எல்.ஐ.சி. செல்வம் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### முரசொலி பாசறை பக்கத்தில் எழுதியவர் ந.வினோத் குமார்!

# சமூகநீதி சிந்தனையோடு தன் சீரிய எழுத்துப்பணியை தொடர்ந்த ஓர் எழுத்தாளரை இழந்திருக்கிறோம்!

## பத்திரிகையாளர் – எழுத்தாளர் ந.வினோத்குமார் மறைவையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!



சென்னை,ஆக.29 -

பத்திரிகையாளர் - எழுத்தாளர் ந.வினோத்குமார் அவர்கள் நேற்று முன்தினம் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் டிவிட்டர் பதிவு வருமாறு:

இளம் பத்திரிகையாளர் ந.வினோத்குமார் அவர்கள் மறைவுற்றார் என்பது மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது.

விகடன், தமிழ் இந்து, டைம்ஸ் ஆஃப் இந்தியா உள்ளிட்ட நாளேடுகள், புதிய தலைமுறையின் ஆங்கில இணையதளமான 'தி ஃபெடரல்' ஆகியவற்றில் பணியாற்றியவர் ந.வினோத்குமார்.

கழகத்தின் இளைஞர் அணி சார்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் முரசொலி பாசறை பக்கத்தில், 'முதன்முதலில்', 'சீரணி', 'இடம் – பொருள் – கலைஞர்' என 3 முக்கியத் தொடர்களை எழுதியுள்ளார். 'திராவிட மாடல் அரசு' தொடரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.

'தமிழரசு கலைஞர்', 'புத்தர் இன்றும் சிரிக்கிறார்', 'வான்– மண் – பெண்', 'வேட்டைக்கார ஆந்தையின் தரிசனம்', 'பாப்லோ The boss' உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். 'முந்நூறு ராமாயணங்கள்', 'நிலம் – துப்பாக்கி – சாதி', 'அமர நாயகன்' உள்ளிட்ட பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

உடல்நலப் பாதிப்புகளையும் பொருட்படுத்தாமல், சமூகநீதி சிந்தனையோடு தன் சீரிய எழுத்துப்பணிகளைத் தொடர்ந்த ஓர் எழுத்தாளரை இழந்திருக்கிறோம் என்பது ஈடு செய்ய இயலாதது.

அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், குடும்பத்தினர் மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# அறிவாலயத்தில்தான் எல்லா தலைவர்களும் இருக்கிறார்கள்!

**தமிழ்நாடு அரசியல் களத்தில் திடீர் அறிவாளிகள் முளைத்திருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு பனையூர் மரத்தடியில் ஞானம் பிறந்திருக்கிறது. அதனால் தி.மு.க. நோக்கி திடீர் குபீர் எனப் பாய்கிறார்கள். தி.மு.க.வின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவால யத்தில் பெரியார் சிலை ஏன் இல்லை? அம்பேத்கர் சிலை ஏன் இல்லை? என்பது அவர்களின் திடீர் ஞானோதயத்தில் எழுகின்ற கேள்வி.**

அண்ணா அறிவாலயம் என்பது தி.மு.க.வின் தலைமை நிலைய அலுவலகம். தி.மு.க நிறுவனரான பேரறிஞர் அண்ணாவின் சிலையை அதன் முகப்பில் நிறுவினார் முத்தமிழறிஞர் கலைஞர். கழகத் தொண்டர்கள் கொடுத்த பணத்திலும், கழக நிர்வாகிகள் மாவட்டம் தோறும் திரட்டிய நன்கொடையாலும் அமைக்கப் பட்டதுதான் அண்ணா அறிவாலயம். கலைஞர் பார்த்துப் பார்த்து கட்டமைத்த கழகக் கோட்டை அது. அதனால், முத்தமிழறிஞர் கலைஞர் மறைந்தபிறகு அவருக்கு அங்கே சிலை அமைத்தார் எங்கள் கழகத் தலைவர். அறிவாலயத்தில் தந்தை பெரியார் சிலை இருக்கிறதா? அண்ணல் அம்பேத்கர் சிலை இருக்கிறதா? என்று வீம்புக்குக் கேட்கிறவர்களின் கவனத்திற்கு...

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலக வாசலில் அண்ணா சிலை கிடையாது. பெயரில் இருக்கின்ற அண்ணா ஏன் சிலையாக இல்லை என்று எவரும் கேட்பதில்லை. கேட்பதும் பொருத்தமில்லை. அ.தி.மு.க.வை நிறுவிய எம்.ஜி.ஆருக்கும், அவருக்குப் பின் அந்தக் கட்சிக்குத் தலைமையேற்று வழிநடத்திய ஜெயலலிதாவுக்கும்தான் சிலை அமைக்கப்பட்டிருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தவரை இந்த மண்ணின் வளர்ச்சிக்காக, மானுட மேன்மைக்காக பாடுபட்ட தலைவர்களுக்கு கட்சி பாகுபாடின்றி, சிலைகளையும் மணி மண்டபங்களையும் அமைப்பது வழக்கம்.

**பேரறிஞர் அண்ணா காலத்திலேயே சென்னை மாநகராட்சியை தி.மு.க. கைப்பற்றிய போது, ஜிம்கானா கிளப் அருகே பெருந்தலைவர் காமராஜருக்கு சிலை அமைக்க தீர்மானம் நிறைவேற்றி, மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்ட அந்தச் சிலையை இந்தியாவின் முதல் பிரதமர் நேரு திறந்து வைத்தார். சென்னை அண்ணா சாலையில் சிம்சன் அருகே தந்தை பெரியாருக்கு சிலை அமைத்தது கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம்.**

**மூதறிஞர் ராஜாஜி பெருந்தலைவர் காமராஜர் ஆகியோருக்கு நினைவிடம் அமைத்ததும் கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சி தான். எம்.ஜி.ஆர். நினைவிடத்தையும் கூட முதன் முதலில் குடை வடிவில் அமைத்துத் தந்தவரும் கலைஞர் தான். அம்பேத்கர் மணிமண்டபத்தை**



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

**உருவாக்கியவர் கலைஞரே!**

**திராவிட நாயகர் கழகத் தலைவர் அவர்களின் சிறப்பான ஆட்சியில் சமூக நீதி காவலர் வி.பி.சிங், குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாம், பொதுவுடமை இயக்கத் தலைவர் காரல் மார்க்ஸ் ஆகியோருக்கு சென்னையில் சிலைகள் அமைக்கப்பட்டன.**

எனினும், அண்ணா அறிவாலயத்தில் அவர் சிலை ஏன் இல்லை, இவர் சிலை ஏன் இல்லை என்று வீம்பான கேள்விகளைக் கேட்கும் வம்படி வாயர்கள் எதிர்காலத்தில் வருவார்கள் என்பதை உணர்ந்துதான், 2003ஆம் ஆண்டிலேயே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் இந்தியாவின் முதல் தலித் குடியரசுத் தலைவர் என்ற பெருமைக்குரிய திரு. கே.ஆர்.நாராயணன் அவர்களைக் கொண்டு திராவிட இயக்க வரலாற்றை விளக்கும் கலைஞர் கருவூலத்தைத் திறந்து வைக்கச் செய்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கட்டளைக்கேற்ப, கழக மாநாடுகளில் அமைக்கப்படும் கண்காட்சியை நிரந்தரமாக்கும் வகையில், முரசொலி மாறன் அவர்கள் முன்னெடுப்பில், இன்றைய கழகத் தலைவர் அன்றைய இளைஞரணி செயலாளர் அவர்களின் மேற்பார்வையில், தஞ்சை ரத்தினகிரி, பொள்ளாச்சி உமாபதி, அன்பகம் கலை உள்ளிட்ட பலரும் அரும்பாடு பட்டு வரலாற்றுப் படங்களையும் குறிப்புகளையும் சேகரித்து உருவாக்கப்பட்டுள்ள கருவூலம் அது.

ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில் பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் இருந்த உறவு, அயோத்திதாச பண்டிதர், தாத்தா இரட்டைமலை சீனிவாசன், மேயர் சிவராஜ், திரு. எம்.சி. ராஜா ஆகியோரின் பங்களிப்பு உள்ளிட்ட அனைத்தும் கருவூலத்தில் படங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. கட்சி எல்லைக்கு அப்பாற்பட்டு யார் வேண்டுமானாலும் கலைஞர் கருவூலத்திற்கு வந்து திராவிட இயக்க வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாம். குறும்படங்களும் திரையிடப்படும்.

**சிலை இருக்கா என்று கேட்கின்ற மூளை வீங்கிகள்கூட அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் கருவூலத்திற்கு வரலாம். வேறு எந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்திலாவது, போற்றுதலுக்குரிய தலைவர்கள் பற்றிய இப்படிப்பட்ட முழுமையான வரலாற்றுப் பதிவு இருக்கிறதா என்பது குறித்து நேர்மையுடன் பேசலாம்.**

**அவர்களிடம் அந்த நேர்மை இருக்கிறதா என்பது தான் கேள்வி.**